# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2004 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க,
## எஸ். டி. பண்டாரநாயக மன்றம்
## (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2004, சனவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 7.75

தபாற் செலவு : ரூபா 4.50

# 2004 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, எஸ். டி.. பண்டாரநாயக மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஓ. 55/2002

## எஸ். டி.. பண்டாரநாயக்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்

"எஸ். டி.. பண்டாரநாயக்க மன்றம்" என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : — முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு கருமங்களையும் குறிக்கோள்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தால் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :—

1. இச்சட்டம் 2004 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க எஸ். டி. பண்டாரநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப்பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது சொல்லப்பட்ட எஸ். டி. பண்டாரநாயக்க மன்றத்தின் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உறுப்பினர்களையும் இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய இனிமேல் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் "எஸ். டி.. பண்டாரநாயக மன்றம்" என்னும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும்; அதன் பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். — எஸ். டி. பண்டாரநாயக மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:—

(அ) கல்வியறிவைப் பெற்றிராத ஏழ்மையில் வாழும் பிள்ளைகள் மற்றும் இளைஞர் போன்ற அத்தகையவர்களுக்குக் கல்வி நடவடிக்கைகள் அத்துடன் ஆரம்பப் பயிற்சிகளை ஒழுங்குசெய்தல் ;

(ஆ) இனங்களிடையே பௌத்த சித்தார்த்தங்களினதும் அன்னியோன்னிய வாழ்க்கையிலும் ;

(இ) சாதாரண மனிதனொருவனின் நலனுக்காக இளம் தொழிலாளரைப் பயிற்றுவித்தல் அடிப்படைமீது நாட்டை உலகளாவிய சமாதானத்துக்கு இட்டுச்செல்லுவது, அதன்மூலம் அறிவுள்ள அபிவிருத்திக்கு ஏற்பாடுசெய்தலும் ;

(ஈ) விவசாயிகளை ஊக்குவித்தலும் இளைஞர் விவசாய ஒழுங்கமைப்புகளை ஆரம்பித்தலும் ;

(உ) முற்தொழிற் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலுமான பயிற்சி குறித்து இளைஞர்களிடையே முக்கிய கவனத்தை ஏற்படுத்தலும் ;

(ஊ) கருத்தரங்குகள், விரிவுரைகள், கண்காட்சிகள் என்பவற்றை நடாத்தலும் அத்துடன் கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குசெய்தலும் ;

(எ) நூல்நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஏ) சுதேசிய வைத்தியத்தில் ஈடுபட்டுள்ளோரின் பரம்பரைகளைப் பாதுகாத்தலும் மருந்து மூலிகைச் செடிகளைப் பாதுகாத்தலும் ; அத்துடன்

(ஐ) மன்றத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேரிலான அல்லது உசிதமான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும், செயல்களையும் கருமங்களையும், விடயங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகளுக்கும் அமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கும், முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், நடாத்துதல், முடிவுறுத்துதல் மற்றும் நேரடியாக அல்லது அவசியமேற்படின் ஒரு பிரதிநிதிமூலம் எல்லா ஒப்பந்தங்களிலும் ஈடுபடுதலும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், நன்கொடைகளையும் மானியங்களையும் பெறுதலும், அவற்றின் நியாயமான வட்டிகளை கொடுப்பனவு செய்தலும் கூட்டுத்தாபனத்தினது நிதிதிரட்டும் அதன் நிதிகளை உள்ளூர் அல்லது வெளிநாட்டு முதலீடுகளில் முதலீடு செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தில் விதிகளுக்கு அமைய அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாகவும் அவற்றுக்கிணங்கவும் தெரிவுசெய்யப்பட்ட நிறைவேற்றதிகாரம் கொண்ட தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், உப பொருளாளர் மற்றும் ஆறு பதவித் தரப்பினரையும் அத்தகைய விதிகளால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறும் அவற்றுக்கிணங்க தேர்ந்தெடுக்கவும்படக்கூடியவரான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களையும் கொண்ட நிறைவேற்றுக் குழு ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு பின்வரும் எல்லா அல்லது ஏதேனும் விடயங்களுக்காக, இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், உறுப்பாண்மையை மையப்படுத்தல், உறுப்பினர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவிகளிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தைகளும், கடமைகளும் ;

(இ) நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் அத்துடன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலமும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) நிறைவேற்றுக்குழுவின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அக்கூட்டங்களில் அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரல்களும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் கருமமாற்றுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப் போன்ற அதே முறையில் அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று வலுவிலுள்ள மன்றத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அவை ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான கடன்கள்.

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று மன்றத்தில் இருக்கின்றதான மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டுத் தீர்க்கப்படல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், மன்றத்துக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாமென்பது.

**8.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வதற்கும், வைத்திருக்கவும் இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை ஈடுவைக்க, விற்க, குத்தகைக்குக் கொடுக்க,

கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க, பாரபந்தப்படுத்த அல்லது பொறுப்புக்களுள்ளாக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்பட்ட அத்தகைய எண்ணிகையினரான பதவிதாங்குநர்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் இடப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராகக் கைையொப்பமிடுதலினின்றும் தனிவேறானதாதல் வேண்டு

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

10. இச்சட்டத்திலுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ, பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

11. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*